8

# குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள்

TML 008

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



எல்லோரும் பெண்கள்.
ஒரே குடும்பச் சட்டம்.
அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள்

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

புதிய வரவாளர்களாகக் கனடாவுக்கு வந்துள்ள பெண்கள் அவர்களுடைய திருமண உறவு அறும்பொழுது பல சவால்களைச் சந்திக்கின்றனர். இவ்வாறான நிலைமைகளில் நீங்கள்:

- கனடாவில் தொடர்ந்து வாழ முடியுமா என்று கவலைப்படலாம்.
- துணைவர் உங்களைப் பொறுப்பேற்க முன்வந்து நாட்டுக்குள் அழைத்து இருப்பார் என்றால் அவரை விட்டுவிலத்திய பின் உங்களை எப்படி நீங்களே பொருளாதார ரீதியில் தாங்கிக் கொள்வீர்கள் என்று கவலைப்படலாம.
- உங்களின் அனுமதி இல்லாமலே உங்களின் சொந்த நாட்டுக்குக் கணவர் பிள்ளைகளை கொண்டு செல்ல முயலக் கூடும் என்று பயப்படலாம்.
- துணைவர் இந்த நாட்டினை விட்டு வெளியேறினால் அவரிடம் இருந்து பிள்ளை ஆதார உதவித் தொகை பெற்றெடுப்பதில் சிரமப்படலாம்.

குடும்பச் சட்ட விவகாரங்களில் உங்களது குடிவரவு அந்தஸ்து சட்டரீதியில் முக்கியத்துவம் பெறுவதில்லை. உங்களுடைய குடிவரவு அந்தஸ்து எதுவாக இருந்தாலும் பரவாயில்லை, நீங்கள் கட்டுக்காப்பு (custody) அல்லது ஆதார உதவித்தொகை (support) கோரி விண்ணப்பம் செய்ய முடியும்.

உங்களுக்கு வேறு எந்தப் பெண்ணைப் போலவும் ஒரே விதமான குடும்பச் சட்ட உரிமைகள் இருந்த போதிலும், நீங்கள் தகுந்த குடிவரவு அந்தஸ்தினைப் பெற்றிருக்காவிட்டால், குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளின் கவனத்துக்கு நீங்கள் வரும்பொழுது நாட்டைவிட்டு வெளியேற்றப்படலாம். கனடாவில் நீங்கள் தொடர்ந்து வாழ்வதற்கான உரிமை உங்கள் குடிவரவு அந்தஸ்தில் தங்கி உள்ளது. உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு நீங்கள் உங்கள் உரிமைகளை அறிந்து இருக்க வேண்டும்.

## 1. குடிவரவுக் கரிசனங்கள்

உங்களுடைய திருமண உறவு அறும்பொழுது நீங்கள் கனடாவில் தொடர்ந்து வாழக் கூடிய உரிமை உங்களுடைய குடிவரவு அந்தஸ்திலேயே தங்கியுள்ளது.

### நிரந்தர குடியிருப்பாளர்கள்

நீங்கள் **நிரந்தர குடியிருப்பாளர்** (permanent resident) அல்லது **நிலைபெற்ற குடிவரவாளர்** (landed immigrant) என்ற அந்தஸ்தை உங்கள் உறவு முறியும் பொழுது கொண்டிருந்தால், அந்த அந்தஸ்தினை நீங்கள் இழக்க முடியாது கனடாவில் இருந்து நீங்கள் அகற்றப்படவும் முடியாது. உங்கள் துணைவர் நீங்கள் கனடாவுக்கு வருவதற்குப் பொறுப்பேற்க முன்வந்து இருந்த போதிலும் உங்கள் உறவு முறிந்துவிட்டது என்ற காரணத்தினால் இவை நிகழ முடியாது. நீங்கள் இருவரும் ஒன்றாக இருக்கிறீர்களோ இல்லையோ எதுவாயினும் உங்களைப் பொறுப்பேற்க முன்வந்தவர் (sponsor) உங்களுக்குப் பொருளாதார ரீதியில் 3 வருட காலத்துக்குப் பொறுப்பாக இருக்கிறார்.

உங்கள் துணைவர் உங்களைத் தொடர்ந்து ஆதரிப்பதற்கு முடியவில்லை அல்லது விரும்பவில்லை என்றால் நீங்கள் உங்களைத் தாங்கி ஆதரித்துக் கொள்வதற்கு சமூக உதவித் தொகைக்கு (social assistance) விண்ணப்பிக்க முடியும்.

கனடாவின் உள்ளே நீங்கள் இருக்கும்பொழுது உங்கள் துணைவர் உங்களுக்கு நிரந்தர குடியிருப்பாளர் ஆவதற்குப் பொறுப்கேற்க முன்வந்து இருந்தால், அதேசமயம் உங்கள் விண்ணப்பம் அங்கீகாரம் பெறுவதற்கு *முன்பாக* உங்கள் உறவு முறியுமானால், நீங்கள் **மனிதாபிமானம் மற்றும் கருணை** (Humanitarian and Compassionate – H & C) **அடிப்படையிலான விண்ணப்பம்** ஒன்றினைச் சமர்ப்பித்து கனடாவில் தொடர்ந்து இருப்பதற்கு விண்ணப்பிக்க முடியும். உங்கள் உறவில் துர்ப்பிரயோகம் இடம்பெற்று இருந்தது என்றால் அதுபற்றி உங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டு குடிவரவு அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும். H & C முறையிலான விண்ணப்பம் ஒன்றில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் கனடாவில் உறுதியாக கால் ஊன்றி இருக்கிறீர்கள் எனவும் உங்களை நீங்களே தாங்கி ஆதரிக்க முடியும் எனவும் காட்ட வேண்டும். சமூக நலன் உதவி பெறும் பெண்களுக்கு இம்முயற்சியில் வெற்றி காண்பது கஷ்டமாக அமையக் கூடும். H & C விண்ணப்பம் ஒன்றினைச் செய்வதற்கு நீங்கள் சட்ட ஆலோசனை பெறுவது அவசியம் ஆகும்.

H & C விண்ணப்பம் ஒன்றைச் செய்வதனால் நீங்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவதில் இருந்து உங்களைப் பாதுகாக்க முடியாது. உங்கள் H & C விண்ணப்பத்துக்கான முடிவு பற்றி அறிய நீங்கள் காத்திருக்கும் சமயத்தில் குடிவரவு அதிகாரிகள் உங்களை தடுப்புக் காவலில் வைத்து, நாட்டைவிட்டு வெளியேற்ற முடியும்.

## அகதிகளும் பாதுகாப்புத் தேவைப்படும் நபர்களும்

நீங்கள் கனடாவில் ஒரு அகதியாக அல்லது பாதுகாப்புத் தேவைப்படும் ஒரு நபராகத் தங்கி இருக்கக் கூடும். நீங்கள் ஒரு மரபு முறை அகதியாக (Convention refugee) அல்லது பாதுகாப்புத் தேவைப்படும் நபராக (person needing protection) அறியப்பட்டு இருந்தால் உங்கள் உறவு முறிந்துவிட்ட காரணத்தால் உங்களைக் கனடாவில் இருந்து அகற்றி விட முடியாது.

உங்களது குடிவரவு நிலைக் கோரிக்கை உங்கள் துணைவரின் நிலை அடிப்படையில் செய்யப்பட்டு இருந்தால், அதே சமயம் உங்கள் அகதிநிலை விசாரணை நடைபெறுமுன்பாக உங்கள் உறவு முறியுமானால், உங்களது கோரிக்கையை உங்கள் துணைவரின் கோரிக்கையில் இருந்து வேறாக்கிக் கொள்ள முடியும். நீங்கள் உங்கள் துணைவரினால் துர்ப்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டு இருந்தால், உங்கள் கோரிக்கையில் அது பற்றிய தகவலினைச் சேர்த்து அதன் அடிப்படையில் பாதுகாப்பினைக் கேட்பதற்கு முடியும். இம்முயற்சியில் வெற்றி பெறுவதற்கு **உங்கள் சொந்த நாட்டில்** நீங்கள் ஆபத்துக்கு உள்ளாவீர்கள் என்று காட்டுவதுடன் அங்குள்ள அரசாங்கம் உங்களின் துர்ப்பிரயோகத்தில் இருந்து உங்களைக் காப்பாற்ற முடியாது அல்லது காப்பாற்ற மாட்டாது என்று விண்ணப்பத்தில் காட்ட வேண்டும்.

உங்களது அகதிநிலைக் கோரிக்கை தோல்வி காணுமானால் நீங்கள் H&C விண்ணப்பம் ஒன்றினைச் சமர்ப்பிக்க முடியும் (மேலே காணுங்கள்). அகற்றப்படுவதற்கு முன்பான ஆபத்துக் கணிப்பு (pre-removal risk assessment – PRRA) ஒன்றைச் செய்யும்படி கோரியும் நீங்கள் விண்ணப்பிக்க முடியும். நீங்கள் உங்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் நீங்கள் சந்திக்க இருக்கும் ஆபத்தினை ஆராய்ந்து பார்க்கும்படி குடிவரவுத் திணைக்களத்தை இந்தச் செயல்முறை வேண்டுகிறது.

### சட்டரீதியான அந்தஸ்து இல்லாத நிலை

நீங்கள் சட்டரீதியான அந்தஸ்து எதுவும் இல்லாமல் இங்கு இருக்கக் கூடும். நீங்கள் வருகையாளராக (visitor) அல்லது மாணவராக இங்கு வந்த அந்தஸ்து காலாவதி (expired) ஆகிவிட்டது அல்லது நீங்கள் சட்டவிரோதமான முறையில் இந்த நாட்டுக்குள் பிரவேசித்தீர்கள் என்ற காரணத்தினால் இந்த நிலை ஏற்படலாம். H & C விண்ணப்பம் ஒன்றினைச் செய்வது பற்றி சட்ட ஆலோசனையை முடிந்தளவு விரைவில் நீங்கள் பெற வேண்டும். உங்களுடைய நிலைமைகளின் கீழ் நீங்கள் செய்யக் கூடிய வேறுவகையான குடிவரவுக் கோரிக்கைகளும் இருக்கக் கூடும். வேறு எந்தப் பெண்ணைப் போலவும் ஒரே விதமான குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் கொண்டிருந்த போதிலும், குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளின் கவனத்துக்கு நீங்கள் வருவீர்கள் என்றால் நாட்டைவிட்டு வெளியேற்றப்படலாம்.

## 2. பெண்ணைத் துர்ப்பிரயோகம் செய்தல்

நீங்கள் துர்ப்பிரயோகத்தை (abuse) அனுபவித்து இருந்தால், குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் உங்கள் குடிவரவு விண்ணப்பத்தினைப் பரிசீலிக்கும் பொழுது இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

பெண்ணைத் துர்ப்பிரயோகம் செய்தல் கனடாவில் சட்டத்திற்கு எதிரானதாகும். பொலீசார் உங்கள் துணைவர் உங்களைத் தாக்கியுள்ளார் என நம்பினால், அவருக்கு எதிராகக் குற்றவியல் ரீதியான குற்றச்சாட்டினை சுமத்துவர். நீங்கள் அவர்கள் அப்படிச் செய்வதை விரும்பாவிட்டாலும் கூட குற்றத்தினைச் சுமத்துவர். நீங்கள் உங்கள் துணைவரைத் தாக்கியதாகப் பொலீசார் நம்பினால், உங்கள் மீதும் குற்றம் சுமத்தப்படலாம்.

ஒரு குற்றவியல் ரீதியான குற்றச்சாட்டு உங்கள் துணைவரது குடிவரவு அந்தஸ்தினைப் பாதிக்கலாம். அத்துடன் அவரை நாட்டிலிருந்து வெளியேற்றம் செய்வதற்கும் இட்டுச்செல்லலாம். நீங்கள் குற்றம் சாட்டப்படாவிட்டாலும் கூட பொலீசார், அரசதரப்பு வக்கீல் அல்லது வேறு நீதிமன்ற அலுவலர் உங்களுக்கு அந்தஸ்து கிடையாது என்பதனை கண்டறிந்து குடிவரவு திணைக்களத்துக்குத் தெரிவிக்கலாம். இவ்வாறு நடைபெற்றால், நீங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு நாட்டிலிருந்து வெளியேற்றப்படலாம். நீங்கள் ஒரு குற்றவியல் குற்றச்சாட்டுடன் சம்பந்தப்பட்டு இருந்தால், ஒரு குடிவரவு சட்டத்தரணியிடமிருந்து உடனடியாகச் சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## 3. குடும்பச் சட்டக் கரிசனங்கள்

குடும்பச் சட்டத்தின் கீழ் குடிவரவாளர், அகதி மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாத பெண்களுக்கும் கனடாவில் பிறந்த பெண்களைப் போன்றே உரிமைகள் மற்றும் பொறுப்புகள் உள்ளன. நீங்கள் கட்டுக்காப்பு, அணுகல் உரிமை, பிள்ளை மற்றும் வாழ்க்கைத் துணையாளருக்கான ஆதார உதவித்தொகை என்பவற்றிற்கான கோரல்களைக் கொண்டுவர முடியும். பிரிவின் போது உங்கள் குடும்பச் சொத்தின் ஒரு பங்கினை உங்களுக்கு வழங்கும்படி நீதிமன்றத்திடம் நீங்கள் கேட்க முடியும்.

நீங்களும் உங்கள் துணைவரும் வேறொரு நாட்டிலிருந்து கனடாவுக்கு வந்திருந்தால், குடும்பச் சட்ட விடயங்கள் கூடுதலான சிக்கல்களைக் கொண்டு இருக்கலாம். குறிப்பாக நீங்களோ அல்லது உங்கள் துணைவரோ சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல முடிவெடுத்தால் இவை அதிக சிக்கலாகும். இதன்பொழுது பொதுவாக எழுகின்ற சில பிரச்சினையான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**a) பிள்ளைகளுடன் இடம் பெயர்தல்**

பெற்றோர் ஒன்றாகக் கூடி வாழாத சந்தர்ப்பங்களில் எழும் ஒரு கஷ்டமான விடயம் எதுவெனில், பிள்ளைகளுடன் கூட வாழும் பெற்றார் அப்பிள்ளைகளை நகரத்திற்கு வெளியே, அல்லது சில சந்தர்ப்பங்களில் மாகாணத்திற்கு வெளியே அல்லது நாட்டிற்கு வெளியே கூட, இடம் மாற்ற முடியுமா என்பதாகும். நீங்கள் ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவுக்காக அல்லது வேலை வாய்ப்பினுக்காக இடம் மாற விரும்பக்கூடும். அல்லது உங்கள் குடிவரவு அந்தஸ்தின் காரணமாக நீங்கள் கனடாவை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். இத்தகைய இடமாற்றம் உங்கள் பிள்ளைகளின் மற்றைய பெற்றாருக்கு ஒழுங்கான முறையில் பிள்ளைகளைச் சந்திப்பதனைக் கடினமாக்கக் கூடும். இடம் மாறும் தூரத்தினைப் பொறுத்து, செலவும் ஒரு பிரச்சினை விடயமாக மாறலாம்.

பிள்ளைகள் தொடர்பான எல்லா முடிவுகளைப் போன்றும், இடமாற்றத்திற்கான அனுமதியை நீதிமன்றம் தீர்மானிப்பது **பிள்ளைகளினது சிறந்த நலன்களின்** அடிப்படையில் ஆகும். நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் இடம் மாற அனுமதிக்கப்பட்டால், நீதிமன்றம் அணுகல் உரிமை ஒழுங்குகளில் அணுகல் உரிமை கொண்ட பெற்றார் நீண்ட நேரம் சந்திப்பதற்கு அனுமதிக்கக் கூடும். அல்லது மற்றப் பெற்றாருக்கு அணுகல் உரிமை தொடர்பாகக் கூடிய பயணச் செலவுகள் இருப்பதன் காரணமாக நீங்கள் பிள்ளைகளுக்கென பெறும் ஆதார உதவித்தொகைப் பணத்தினைக் குறைக்கக்கூடும்.

**b) பிள்ளைகளுடன் பிரயாணம் செய்தல்**

அநேகமான சந்தர்ப்பங்களில், **மற்றப் பெற்றாரின் அனுமதி இன்றி ஒரு பெற்றார் பிள்ளையைக் கனடாவுக்கு வெளியே கூட்டிச் செல்ல முடியாது.** நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் பயணம் செல்வதாயின், கட்டுக்காப்புக் கட்டளை மற்றும் மற்றப் பெற்றார் கனடாவுக்கு வெளியே பிள்ளைகள் செல்ல அனுமதி வழங்கும் கடிதம் என்பவற்றை நீங்கள் வைத்திருக்க வேண்டும். இந்தக் கடிதம் ஒரு வழக்கறிஞரால் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். நீங்கள் எல்லையைக் கடக்கும் போது, எல்லைக் காவலர்கள் பிள்ளைகளினது மற்றப் பெற்றாருக்கு அந்தப் பயணம் பற்றித் தெரிந்திருப்பது மற்றும் அவர் அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது பற்றி உங்களிடம் கேட்பதை நீங்கள் எதிர்பார்த்திருக்க வேண்டும்.

**c) பிள்ளை கடத்துதல்**

சிலவேளைகளில், ஒரு பெற்றார் பிள்ளைகளை மற்றப் பெற்றாரின் அனுமதியின்றி கனடாவுக்கு வெளியே அழைத்துச் செல்வார். இது மிகவும் பாரதூரமானதாகும், ஏனெனில் கனடாவுக்கு வெளியே சென்றுவிட்டால் பின்னர் பிள்ளைகளை மீண்டும் பெறுவது என்பது கடினமாகி விடக்கூடும். இது **பிள்ளை கடத்துதல்** (child abduction) என்று அழைக்கப்படும். பிள்ளை கடத்துதல் கனடாவில் ஒரு பாரதூரமான குற்றச்செயல் ஆகும்.

கனடாவைவிட்டு சட்டவிரோதமாக உங்கள் பிள்ளைகள் எப்போதும் செல்லாது இருக்க முற்றுமுழுதாக ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும், நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கவெனச் செய்யக் கூடிய சில விடயங்கள் உள்ளன. உங்கள் கட்டுக்காப்புக் கட்டளை அல்லது ஒப்பந்தம் பின்வருமாறு இருப்பதை உறுதிப்படுத்துங்கள்:

- இயலுமனானவரை தெளிவாகவும் விபரமாகவும் இருப்பது
- பிள்ளைகள் கனடாவை விட்டு வெளியில் பயணம் செய்ய முடியாது என்று குறிப்பாகச் சொல்லி இருப்பது

பிள்ளைகளது கடவுச்சீட்டுகள் அல்லது அணுகல் உரிமை கொண்ட பெற்றாரின் கடவுச்சீட்டு உங்கள் பாதுகாப்பில் அல்லது நீதிமன்றத்தின் பாதுகாப்பில் இருக்கும் எனவும் கட்டளையில் மேலும் குறிப்பிடப்பட்டு இருக்கலாம்.

உங்களது பிள்ளைகளைத் திரும்பப் பெற உங்களுக்கு உதவக்கூடிய முக்கியமான சட்டம் *சர்வதேச பிள்ளை கடத்துதலின் குடிமுறை அம்சங்களுக்கான ஹேக் சட்ட சாசனம் (Hague Convention on the Civil Aspects of International Child Abduction)* ஆகும். இது 75 நாடுகள் கைச்சாத்திட்டுள்ள ஒரு சர்வதேச பிரகடனம் ஆகும். இதில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் தாம் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் சட்ட விரோதமாக இடம் மாற்றப்பட்டுள்ள பிள்ளைகளைக் கண்டுபிடித்து திரும்ப அனுப்ப ஒன்றோடு ஒன்று சேர்ந்து செயற்பட சம்மதம் தெரிவித்துள்ளன.

இந்தச் சாசனத்தில் கையெழுத்திடாத நாடொன்றுக்கு உங்கள் பிள்ளை கொண்டு செல்லப்பட்டிருந்தால், கனடாவுக்கு உங்கள் பிள்ளையைத் திரும்பவும் கொண்டுவருவது அதிக சிரமமான விடயமாக இருக்கும். இது நடைபெற்றால், உங்கள் பிள்ளை கொண்டு செல்லப்பட்ட நாட்டின் சட்டங்களின் அடிப்படையில் நீங்கள் கட்டுக்காப்புக்காகப் போராடலாம். கடத்தல்காரர் மற்றும் அவரது குடும்பத்தினருடன் நீங்கள் பேசி ஒரு முடிவுக்கு வருவதற்கும் முயற்சிக்கலாம்.

## d) ஒன்ராறியோவிற்கு வெளியே வாழும் ஒருவரிடம் இருந்து ஆதார உதவித் தொகை பெற்றுக் கொள்ளல்

**குடும்ப பொறுப்பதிகாரப் பணியகம்** (Family Responsibility Office – FRO) எனப்படும் ஒரு மாகாண அரசு முகவர் நிலையத்தினால் ஒன்ராறியோவில் பிள்ளை மற்றும் வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித்தொகைக் கட்டளைகள் நிறைவேற்றப்படுகின்றன. பணம் கொடுப்பவர் (பிள்ளைக்கான ஆதார உதவித்தொகை வழங்குபவர்) கனடாவில் அல்லது ஐக்கிய அமெரிக்க நாட்டில் எங்கிருந்தாலும் அல்லது வேறு சில நாடுகளில் வசித்து வந்தாலும் FRO பணியகம் ஆதார உதவித் தொகைப் பணத்தினை அவரிடமிருந்து அறவிடும். கனடாவின் எல்லா மாகாணங்களும் ஐக்கிய அமெரிக்க நாட்டுப் பிராந்தியங்களும் வேறு சில நாடுகளும் ஆதார உதவித் தொகையை FRO பணியகம் தம் எல்லைகளைக் கடந்து சேகரிக்க அனுமதிக்கும் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டுள்ள காரணத்தால் இது சாத்தியமாகிறது.

இவ்வாறான ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத நாடொன்றில் பணம் கொடுப்பவர் வசிப்பாரேயானால், ஆதார உதவித் தொகைக் கட்டளையை நிறைவேற்ற FRO பணியகம் உங்களுக்கு உதவ முடியாது. நீங்கள் ஆதார உதவித் தொகையினைச் சேகரிப்பதற்கு முடிந்த ஒரே வழி பணம் தருபவர் வாழும் நாட்டுச் சட்டங்களைப் பயன்படுத்துவது ஆகும்.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. **குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)**
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.